திரு. ஏ. சுப்ரமணியம்: தலைவர் அவர்களே, பஞ்சாலைகள் போன்ற தொழிற்சாலைகள் இந்த மின்வெட்டு உள்ள காலத்தில் ஜெனரேட்டரைப் பயன்படுத்தி ஆலைகளை ஓட்டிக் கொண்டிருக்கின்றன. ஜெனரேட்டர்களுக்கு டீசல் எண்ணெய் கிடைக்காமல் ஜெனரேட்டர்களை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஜெனரேட்டர்களுக்கு போதுமான டீசல் எண்ணெய் கிடைக்கவில்லையென்று புகார் வரவில்லை. அப்படி வந்தால் பரிசீலிக்கலாம். இப்போது பருத்தி ஆலைகள் ஜெனரேட்டர்களைக் கொண்டு சமாளித்து வருவதாகத் தான் தகவல் கிடைத்திருக்கிறது.

தஞ்சாவூர் பனகல் கட்டடம்

* 517 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் பனகல் கட்டடத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் பனகல் கட்டிடத்தில் குறிப்பாக மாவட்ட பஞ்சாயத்து அலுவலர்களின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதற்கு போதுமானதாக இடம் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கட்டிடத்தில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர், மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அலுவலகங்கள் இயங்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பனகல் கட்டிடத்தை விரிவுபடுத்தி இந்த இரண்டு அலுவலகங்களைப் பிரித்து மாவட்ட பஞ்சாயத்து அலுவலகங்கள் மட்டும் இயங்கக்கூடிய இடமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, பனகல் கட்டிடத்தில் மேலும் இடவசதி தேவைப்படுவதால் அதற்காக ரூ. 2.5 லட்சத்தில் ஒரு திட்டத்தைத் தயாரித்து இப்போது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

1975 ஏப்ரல் 1]

திரு. கோ. இளங்கோவன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு பரிசிலனையில் இருக்கிறது, அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னர்கள். அலுவலகங்களைப் பிரித்து வைத்தால் அங்கே சென்று காரியங்கள் நடைபெறுவதற்கு வசதியாக இருக்குமென்று அமைச்சர் அவர்கள் உணர்ந்து அந்த அலுவலகங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்வாரா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: புதிதாக அடிஷனல் பில்டிங் கட்டுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. தனியாக வைப்பதா, அல்லது சேர்த்து வைப்பதா என்பது பின்னல் யோசிக்கப்படும்.

திரு. சி. க. வடிவேலு: தலைவர் அவர்களே, பனகல் கட்டிடத்தை அபிவிருத்தி செய்தால் அங்கே 4, 5 ரூம் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் என்று ஏற்பாடு செய்தால், அவர்கள் வேலைகளை துரிதமாகப் பார்க்கலாம். அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பார்க்கலாம். அவ்வாறு இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எந்த மாவட்டத்திலும் இல்லாத வசதி. தஞ்சையில் ராஜா சத்திரம் என்ற அரசினர் விடுதி இருக்கிறது. ரொம்ப தூரம் இல்லை. அங்கே நூற்றுக்கணக்கான அறைகள் இருக்கின்றன. அதன் காரணமாக மேலும் இதற்காக வசதிகள் செய்வதற்கு ரூ. 2.5 லட்சத்தில் ஒரு கட்டிடம் கட்ட நாம் எஸ்டிமேட் போட்டது 1973-ல். அதற்கு இப்போது இன்னும் அதிகம் செலவழியும். முதற்கட்டமாக எக்ஸ்டென்ஷன் பில்டிங் கட்ட முயற்சிக்கிறோம்.

திரு. அ. தேவேந்திரன்: தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு ரூ. 2.5 லட்சத்தில் கட்டிடத்தை விரிவுபடுத்த ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது கூறினர்கள். பனகல் கட்டிடத்தை விரிவுபடுத்துகின்ற நேரத்தில் அதற்கு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமோ அல்லது வேறு சங்கடமோ எழப்போவதில்லை என்பது உண்மை. இந்த ஆண்டிலேயே செய்ய முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்த ஆண்டிலேயே செய்வதற்கு முயற்சிக்கிறோம்.